<u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதி தொலைவரியில் அனுப்பவும். இது இவ்வாரத்திற்கான பாடம். அதனால், இக்கேள்விக்கான பதிலை புதன்கிழமை இரவு 10.00 மணிக்குள் அனுப்பி விடவும். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) செவ்வாய் இரவு **8.30** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

மூன்றினங்கள் வாழ்ந்தபோதும் ஆட்சி ஒன்றுதான் – இங்கு
முன்னுயரும் வழியெவர்க்கும் பொதுவில் ஒன்றுதான்
சான்றெனவே மற்றவினம் வளம் பெருக்குது – தம்பி
சாணுயர்ந்தால் நம்மினம்ஏன் முழம் சறுக்குது?

**பகுத்தறிவு வளர்ச்சியில்**நாம் பழையவர் தானே – உயர்
பண்பாடு நெறியிலெல்லாம் சிறந்தவர் தானே
வகுத்துவைத்த குறள்நெறியை மறந்தத னாலே – தம்பி
வாழ்ந்து கெட்டோம் மறுபடிவா வாழ்ந்து காட்டுவோம்!

**(கவிச்சிட்டு கோவி. மணிதாசன்)**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **அணி நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. (i) **பகுத்தறிவு வளர்ச்சி** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

   (ii)

   | |
   |---|
   | வகுத்துவைத்த குறள்நெறியை மறந்தத னாலே – தம்பி<br>வாழ்ந்து கெட்டோம் மறுபடிவா வாழ்ந்து காட்டுவோம்! |

   இவ்வடிகளில் மூலம் **மீண்டும் வாழ்ந்து காட்ட என்ன செய்ய வேண்டும்** எனக் கவிஞர் கூறுகிறார்? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **கொள்கையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) குலோத்துங்கச் சோழனின் **பகைவர்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **காலப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> சோழன் : [அம்பிகாபதியைப் பார்த்துத் திரும்பி] உன்னை இப்போதே வெட்டித் தலைக் குவியலாகக் குவிக்க முடியும். அதிலும் என் மனம் ஆறாது என்பதற்காக விட்டு வைத்திருக்கிறேன். [திடீரென்று குரலை மாற்றிப் பரிதாபமாக] அம்பிகாபதி, உனக்கு நான் செய்த தீங்கு என்ன? உன் தந்தைக்கு நான் இழைத்த கொடுமை என்ன? **என்னையும் என் குலத்தையும் மானப்பங்கம் செய்ய...**
>
> அம்பி : [உரத்த குரலில்] சக்கரவர்த்திக்கு நான் தீங்கிழைக்கவில்லை. மானபங்கம் செய்ய நான் சக்கரவர்த்திக்குப் பகைவனல்ல.
>
> பல்லவ : அம்பிகாபதி பேசாதே... பேச வேண்டாம்.
>
> அம்பி : கவிஞன் குரலை அவ்வளவு சுலபத்தில் மிரட்டி ஒடுக்கிவிட முடியாது.
>
> (அங்கம் 2, காட்சி 11 பக்கம் 181)
> (பாரி நிலையம் 2015)

(i) இச்சூழலில் வெளிப்படும் சோழ மன்னன் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **என்னையும் என் குலத்தையும் மானப்பங்கம் செய்ய** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

7. அகல் விளக்கு நாவலாசிரியர் **அடை பெயரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) அகல் விளக்கு நாவலில் வேலய்யனின் இரண்டு **நண்பர்களைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) அகல் விளக்கு நாவலின் **சமுதாயப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> 'நான் செத்தாலும் அவர்களுக்குத் தெரிவிக்காதே. நீயே எடுத்துப் போட்டுவிடு. ஒழியட்டும். **என் வாழ்வு என்னோடு ஒழியட்டும்.** நீயே எடுத்துப் போட்டுவிடு. யாரும் கொள்ளியும் வைக்க வேண்டாம். மண்ணில் சும்மா போட்டு மண்ணைத்தள்ளி விடு. போதும். இது என் வேண்டு கோள். உன் நண்பனுடைய கடைசி வேண்டுகோள். மறக்காதே' என்றான்.
>
> அந்தச் சொற்கள் என்னைக் கலக்கின. என் நெஞ்சம் உடைந்து, கண்ணீர் வழிந்து நின்றேன். சந்திரன் தலை நிமிர்ந்து நான் கண்ணீர் விடுவதைப் பார்த்துவிட்டான்." அழுகிறாயா? வேலு! எனக்காக அழுகிறாயா? அழு. அழு ஆசுபத்திரியில் இருந்த போது, நான் செத்தால் அழுகிறவர் இந்த உலகத்தில் யாரும் இல்லை என்று எண்ணினேன். நீ ஒருத்தன் இருக்கிறாய். அழு. வேலு எனக்காக அழுகிறாய். என் அழுகிய உடலை எடுத்து மண்ணில் போட்டுவிட்டு அழுவதற்கு நீ ஒருவன் இருக்கிறாயே, அது போதும்" என்றான்.
>
> (அத்தியாயம் 27, பக்கம் 406-407)
> (பாரி நிலையம் 2015)

(i) இச்சூழலில் வெளிப்படும் சந்திரனின் **பண்புநலன்** இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **என் வாழ்வு என்னோடு ஒழியட்டும்** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]